ஓலை 54 | ஓசை 173 | நளி (டிசம்பர்) 2023

# அகர முதல இலக்கிய பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அ:.தொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence there is none equal to that of being free from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# கோயில் எதுவென்று கூறு?

**பா வகை: கலித்தாழிசை**

அன்பும் உருகி ஆறாய் ஓடும்
துன்பம் துடைக்க தோள்தரும் நாளும்
துன்பம் துடைக்க துடித்திடும் உள்ளம்
இன்பம் அளிக்க இன்கை நீளும்
கன்னல் மனமே கடவுளும் ஆகும் என்றுமே

எதற்கும் கலங்கா இறையின் நிழலில்
உதவும் நெஞ்சமே உற்றதோர் கோவில்
அதனால் தானே அன்பும் உயர்நிலை
அதனால் தானே அன்பே இறைநிலை
இதமாய் பற்றி ஏற்றமும் காண்க உலகிலே

கெடுதல் நினைக்கா கேண்மை உள்ளம்
இடுக்கண் களையும் ஈடிலா முயற்சியில்
இடுக்கண் களைய இடரையும் தாங்கும்
தொடுக்கும் கனிவே தோன்றும் கோவிலாய் பண்பிலே

**சிறுவர் பாடல்**
**விளம் + மா + விளம்**

அடுத்தவர்க் குதவும் உள்ளமே
ஆண்டவன் குடிகொள் இல்லமே
படுந்துயர் கண்டு பாய்ந்துதான்
பல்வினை ஆற்று போக்கவே

நல்லன செய்தால் நாடியே
நாமுமே புரிவோம் தொண்டுமே
வல்லமை சேர்க்கும் வழிகளை
வளமுடன் தொடுவோம் வாழ்விலே

கனிந்தநல் நெஞ்சம் கடவுளாய்
கண்களும் காணும் உண்மையே
பனித்துளி போல குளுமையை
பகிர்ந்திடு நாளும் இனிமையே



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# இன்றைக்கும் என்றைக்கும் நீ மக்கள் நெஞ்சத்தில்!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து இரண்டில்
மதுரை திருமங்கலத்தில் உதித்த மதுரைசூரனவர்!
பொன்மனச் செம்மலின் தீவிர இரசிகனாய்த் திகழ்ந்த
பொன்மனச் செல்வனவர்! அகவை இருபத்தேழில்
திரையுலகில் ஒளிரத் துவங்கிய அகல்விளக்கு!
தூரத்து இடிமுழக்கமும் ,சட்டம் ஒரு இருட்டறையும்
திரையுலகம் உன்னை திரும்பிப் பார்த்தது!
கமல், ரஜினி இருவரும் ஆட்சிசெய்த காலத்தில்
உனக்கென ஓரிடத்தைத் தக்கவைத்தாய் திரையுலகில்!
கலைஞர்கள் அனைவருக்கும் தனக்களிக்கும் உணவையே
அளித்திடச் செய்தாய்! அனைவரையும் கவர்ந்தாய்!
பொன்மனச் செம்மல்போல் பசிப்பிணி போக்குவதை
தன்னுடைய குறிக்கோளாய்க் கொண்டிருந்த தலைவன்நீ!
வானத்தைப் போல மனம் படைத்த
சின்னக் கவுண்டரைக் கொண்டாடினர் மக்கள்!
உன்னுடைய இரசிகர் மன்றம் பின்னாளில்
அரசியல் கட்சியினை தோற்றுவிக்க உதவியதே!
கருப்பு எம்.ஜி.ஆராய் உனைக் கண்டனர் மக்களுமே!
அரசியல் அங்கீகாரம் வழங்கியது விருத்தாசலம்!
புரட்சித் தலைவியும், கலைஞரும் அரசியலில்
கோலோச்சிய காலத்தில் தே.மு.தி.க கட்சி
எல்லோரும் வியந்திட எதிர்க்கட்சி ஆகியதே!
வெள்ளை உள்ளம், எளிமை, அறச்சீற்றம்,
உள்ளார்ந்த ஆற்றல்,சமரசமற்ற நேர்மை,
கண்ணியம் கொண்ட கதாபாத்திரமாய் திரையில்
மட்டுமின்றி நிஜவாழ்விலும் திகழ்ந்தவன் நீயன்றோ?
துணிச்சலான காவல்துறை அதிகாரி, அநியாயத்தை
எதிர்த்துப் போராடும் நாயகனாய்த் தோன்றிய
அதிரடி நாயகனே! சகாப்தம் ஆனவனே!
எழுபத்தோரு ஆண்டுகள் இவ்வுலகில் வாசம்!
டிசம்பர் இருபத்தெட்டில் இவ்வுலகைத் துறந்தாயே!
உறுபசி போக்கிய உத்தமனே! உந்தன்
இறுதி ஊர்வலத்தில் திரண்ட மக்கள்வெள்ளம்
உறுதியாய் உணர்த்தியது ஒன்றினை! இன்றைக்கும்
என்றைக்கும் நீயிருப்பாய் மக்கள் நெஞ்சத்தில்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# புத்தாண்டே வருக

வீட்டிற்கு ஒரு விவசாயி
பூமியில் பிறக்கட்டும்

வெட்டிய மரக்குழியில்
விதைகள் மீண்டும் புதையட்டும்

மாளிகையின் சுவர்தனில்
கூரைகளும் பொருந்தட்டும்

கல்வி எனும் காட்டாறு
மூலை முடுக்குகள் நிரப்பட்டும்

ஜாதி மதம் இல்லா உலகம்
வரைபடம் ஆகட்டும்



பெண்மை எனும் அத்தனை வடிவிலும்
அன்னையை காணட்டும்

பிஞ்சுக் கரங்களின் ஆறாம் விரல்கள்
புத்தகங்கள் மட்டும் சுமக்கட்டும்

உள்ளம் என்றும் கோவிலாகி
கருவறை தாங்கட்டும்

எண்ணம் எனும் அழகிய ஏட்டில்
புனிதங்கள் புதையட்டும்

சிந்தனைப் பூட்டுகள் சாவிகள் தொலைத்து
சிறகுகள் முளைக்கட்டும்

மனதின் வடிவம் மழலையாகி
மகிழ்ச்சி நிலைக்கட்டும்

உண்மை தாகம் நேர்மை அருந்தி
சமூகம் வளரட்டும்

புத்தாண்டே வருக!


கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# ஹைக்கூ

பாலைவன இயற்கைபூங்கா
ஊஞ்சலில் அமரும் மைனா
ஆட்டுவிக்கும் காற்று.

மறுகால் ஓடும் குளம்
சாலை கடக்கும் மீன்கள்
காத்திருக்கும் பள்ளிச்சிறுவன்

சிறுபள்ளத்தில் வாழும் மீன்
எல்லை தாண்டிச் செல்கையில்
ஆரம்பிக்கும் கடல்வாழ்க்கை.



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# சூடிக்கொடுத்த சுடர்க்கொடி!

விடியலில் நந்தவனம்
விரைந்தார் பெரியாழ்வார்.

புதுமதுப் பொங்கும்
பசுந்துழாய் பூட்டினூடே

ஆடிப்பூர நன்னாளில்
அழகியக் குழந்தை

பூமாலையோடு நாளும்
பாமாலை பாடும்

பெரியாழ்வார் வளர்த்திட
பெருமாளை விரும்பினாளவள்

புதிதாய்ப் பூத்த
பூக்களின் புதுமை

வாடிடும் முன்னே
பாமாலை பாடியே

விரைந்து தொடுத்தார்
விரைமலர் பூமாலையை!

பூமாலை நிறைந்த
பூக்குடலையில் இருந்தே

மாலை அணிந்து
மாலை நினைத்தாள்,

ஆடியின் முன்னே
ஆண்டாள் அழகாய்.

செல்ல மகளின்
சிறுமை செய்கை

ஆறாத் துயரில்
ஆழ்வார், ஆழ்ந்தார்!

கனவில் அரங்கன்
கன்னியின் செயலால்

உவந்ததைக் கூறிட
உண்மை உணர்ந்தே

பிராட்டியின் வடிவாய்
பார்த்தார் கோதையை.



சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
என்றே அழைத்தார்.

பாமாலை பாடியே
பாவை நோன்பு!

திருப்பாவை பனுவல்
திருமொழி நாச்சியார்

பாடியே மணப் பெண்ணாகி
பரந்தாமனை நினைக்க

திருவரங்கன் கருவறையில்
திருவடியில் கலந்தாள்.

ஒருமகளை வளர்த்தேன் திருமகளாய்!
திருமால்

தான் கொண்டு
தன்னோடு இணைத்தானே!

என்றே பெரியாழ்வார்
ஏற்றத்தோடு மொழிந்தாரே!

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# ஹைக்கூ

தரிசு நிலம்,
செடிகள் மூடிக்கொண்டது
குளிர் காலம்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# இருளே விலகிடு

இருளே விலகிடு
இனிமையாக விடியட்டும்

விடியலில் வெற்றிகள்
விண்வரை விரியட்டும்

விரியட்டும் விண்ணகமும்
இன்னல்கள் அகலட்டும்

அகலட்டுமே அறியாமைகள்
அகால காலங்களிலே

காலங்களில் கருமை
பெருகியே கார்மேகங்களாட்டுமே

கார்மேகங்கள் மழையாகட்டுமே
காவிரியாக ஓடட்டுமே

ஓடட்டும் தீண்டாமைகளே
ஓய்வில்லாத உழைப்பினிலே

உழைப்பின் உயர்வில்
உன்னதங்களை காட்டட்டுமே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பாவை நோன்பும் மார்கழி மாதத்தின் மாண்பும்

மார்கழி மாதம் இறைவனுக்கு உகுந்ததே
மார்கழி மாதம் தேவர் மாதமே
மங்கல நிகழ்வுகள் இம்மாதத்தில் நடக்காதே
மங்கலமாய் கண்ணனைத் தொழுது நங்கையர்
கண்ணனை புகழ் பாடும் மாதம்
ஆயிரம் குளங்கள் நிறையும் மாதம்
ஆனந்தக் கோலத்தில் கன்னியர் ஆடிடுவாரே
திருப்பாவை திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி
தினமும் ஓதி மகிழும் மாதம்
வீதிகள் தோறும் பஜனைகள் பாடி
வீடெல்லாம் மகிழ்ச்சி தரும் மாதம்
நல்ல அறநெறிகளை பின்பற்றிட செய்வாரே
நன்மைகள் செய்து நலமாய் வாழ்வாரே
இல்லங்கள் தோறும் தெய்வீக மணக்குமே
பூத்துக் குலுங்கும் மலர்கள் எங்கும்
பூமணம் வீசி இயற்கை அன்னையை
மகிழ்வூட்ட செய்யும் மாதம் மார்கழி
மார்கழி என்றாலே பாவை நோன்பாகுமே
மார்கழி இசைவிழா உள்ளத்தை மயக்குமே
இசையின் நடுவே மிதக்கும் சுவாமிகளின்
வீதி உலா கண்களை கவருமே
மார்கழி மாதங்களில் சுவாசம் ஆகுமே
மனசெல்லாம் நிறைந்து வாசலில் கோலமிட
வயது பெண்கள் இருப்பதை உணர்த்தி
வயதானவர்கள் தை மாதத்தில் வரன்
தேடிட செய்யும் மாதமும் மார்கழியே
மகத்துவம் நிறைந்த மாதம் மார்கழி
ஊரெங்கும் உற்சாகம் மனசெல்லாம் நிறையுமே
மார்கழியின் ஞாபகங்கள் நம்மை நினைவூட்டுமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# நெஞ்சுக்குள்ள வச்சிருக்கும் சின்னபுள்ள

என்னைப்பொத்தி நெஞ்சுக்குள்ள
வச்சிருக்கும் சின்னபுள்ள

கண்ணிரண்டும் தேடுதடி
கன்னியுன்ன காணாமத்தானே

மனசுக்குள்ள தவிப்பாச்சி
பச்சைக்கிளிய பாத்திடத்தானே

தாழம்பூகொண்டை போட்டுத்தான்
தளுக்குகிட்டு போவியே

ஓரகண்ணாலப் பாத்துகிட்டு
ஒய்யாரமா நடப்பியே

ஆசையோடு பக்கத்துல
வந்தா வெக்கப்படுவியே

தள்ளித்தான் போயிடுன்னு
செல்லமாச் சிணுங்குவியே

கட்டிப்பிடிக்க வந்தாக்கா
காததூரம் ஓடுவியே

ஏக்கமாப் பாக்கையில
ஏளனமாச் சிரிப்பியே

கன்னத்தில் முத்தமிட்டா
செவந்துதான் நிப்பியே



ராவெல்லாம் ஒநெனைப்புல
தூங்காம முழிச்சிருக்கேன்

காதலோடு நாஇருக்கேன்
எப்பத்தான் வருவியோ

பாசாங்கு காட்டாதடி
பாவம்தான் நானடி

என்னைப்பொத்தி நெஞ்சுக்குள்ள
வெச்சிருக்கும் சின்னபுள்ள

ஏமாத்தாம வெரசா
கண்ணே வாயேன்டி

கொலுசுச்சத்தம் கேட்கையில
குதூகலம்தான் பொறக்குதடி

தாலிகட்ட நானிருக்கேன்
தயங்காம வாடிபுள்ள.

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

என்னதான் உரிமையுடன்
பெயர்ச் சொல்லி அழைத்தாலும்
உறவு வைத்து அழைப்பதில்
உயிர்ப்பு அதிகம்.
/
ஒன்றும் தெரியாதவள் போல்
நீ அமைதியாக
வந்து போய் விட்டாய்.
சொல்லொணாப் பிரளயம்
எனக்குள்.
/
எனது எழுத்துக்களை
எழுத்துக் கூட்டிக் கூட்டி
வாசிக்கிறேன்.
உனது கவிதைகளை மட்டும்
எப்போதும்
சரளமாக வாசிக்கிறேன்.
/
பூவில் வண்டு
தேனருந்தும் தருணம்
இனிதே நிகழ்ந்து முடிகிறது
ஆலிங்கனம்.
/
பெய்யும் மழையில்
ஓடி ஒளியாமல்
நனைகிறது மழை!



பல நேரங்களில்
சம்மதத்தை தெரிவித்தாலும்;
சில நேரங்களில்
அர்த்தமற்றதாகி விடுகிறது
மௌனம்.
/
நீ கொடுத்த நிறைவு
இல்லை; நானாக
எடுத்துக் கொண்டதில்.
/
கணவனானது
மனைவியானது
தலையணை ஒன்று.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# இலஞ்சம்

நேர்மைக்கு கிடைக்காத வேலை
உழைப்புக்கு கிடைக்காத ஊதியம்
படிப்புக்கு கிடைக்காத மரியாதை
உண்மைக்கு கிடைக்காத நீதி
அன்புக்கு கிடைக்காத உறவுகள்
அவசரத்திற்கு உதவாத நட்பு
மண்ணுக்கு கிடைக்காத மரியாதை
இவை நெஞ்சினில்
அணைக்க முடியாத "நெருப்பு "



கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா,மூதூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# சேலை



அன்பான அன்னையவள்
சேலையில் சுகமாக,
அருகாமையை உணர்ந்து
ஆனந்தமாய் உறங்கிடும்
குழந்தை!
நடைபயிலும் போது
அம்மாவின் சேலைத் தலைப்பு
ஆறாம் விரலாய் மாறிடுதே!
வளரும் பருவத்தில்
மரக்கிளையில் ஊஞ்சலாய்
பரிணமிக்கும் அம்மாவின் சேலை!
வளர்ந்த இளங்குமரிகளுக்கு
தாவணியாய் தன்னை
மாற்றிக் கொள்ளுதே!
அம்மாவின் மடி சாய்ந்து
ஆனந்தமாய் கதை பேச முகம்
வருடுமே அவள் வாசம்!
வண்ண வண்ண பட்டாம்பூச்சியாய்
விதவிதமாய் சேலை கட்டி
சுற்றி வரும் அழகு மகள்!
திருமண கோலத்தில் பட்டுடுத்தி
மணமேடை ஏறும் நாள்
பெற்றோரின் வாழ்வில் திருநாள்!

கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# சின்ன சின்ன வெளிச்சங்கள்



மெழுகுவர்த்தி உருக உருக
ஆடை போர்த்துகிறது
அடர் இருள்

தீக்குச்சியின் வெட்கத்தில்
கண்களை போர்த்துகிறது
வெண்வெளிச்சம்

மின்விளக்கு வந்ததும்
மொத்தம் அமர்த்துகிறது
காற்றை அணைத்த வெளிச்சம்

காதலை பரிமாறியவரின்
கைக்குள் சிக்கியது
விழி பிதுங்கிய ஒளியொன்று

கைநீட்டி பெற்ற மழையில்
மின்னி மலர்கிறது
வானில் வாலிட்ட மின்னலொன்று

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# எம்மதமும் சம்மதம்

பிறப்பால் எவருக்கும் தாழ்வு இல்லை
சிறப்பால் அடைவர் உயர்வின் எல்லை
சாதி மத பேதத்தால் தொல்லை
சாதிப் போரை ஏற்படுத்தி விட்டிடாமல்
சாதிப்போராய் நின்று பாரை உயர்த்து
கோட்டைவேந்தனுக்கும் வேட்டை மாந்தனுக்கும் என்றும்
உலகியல் தேவை என்றும் ஒன்றே
உணர்ந்து செயல்பட்டால் ஒற்றுமை நன்றே
வேதங்கள் படித்தாலும் பேதங்கள் பார்க்காதே
மதங்கள் போதிப்பது அன்பு ஒன்றையே
மதங்களைக் கடந்தும் வாழட்டும் மனிதம்
பிறந்த உயிர்கள் அனைத்தும் புனிதம்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# ரயில் பயணங்கள்

ரயில் பயணங்களிலே
ரசீதும் பெற்றுக்கோண்டே
ரகசிய ஆவல்களுடன்

ரகரகமான இடங்களுக்கும்
ரதம் போல பயணித்தே
ரசனையாக காட்சிகளும்

ரம்மிய அழகையுமே
ரசித்து ருசித்து கண்களுமே
ரசாயன மாற்றமும் செய்திட்டே



ரத்த அணுக்களும் குளுங்கிடுமே
ரத்து செய்திட வலித்திடுமே
ரத்தின ஒளியாக ஜொலித்திடுமே

ரசபாசங்களளும் கிடையாதே
ரதியாக மிளிர்ந்திடுமே
ரட்சித்தே அழைத்து சென்றிடுமே
ரத்த பந்தமாய் தொடர்ந்திடுமே

ராகத்தோடு தாலாட்டிடுமே
ராத்திரி நேர பயணத்திலே

ராஜாபோல கம்பீரமாகவே
ராக்கெட் போல கிளம்பிடுமே
ராசி பார்க்க வேண்டாமே

ராகத்தோடு நகர்ந்திடுமே
ராட்டைபோல சக்கரமும்
ரிதம் போல பயணமும்

ரீங்காரமாக நாதமாக
ருத்ரதாண்டவ ஆட்டத்தோடு
ரூபாய் நோட்டுடன் சென்றிட்டால்
ரெட்டைஜடை குழந்தை போல

ரேரே என்றே குதூகலிக்க வைத்திடுமே
ரைட் சொல்லும் விசில் சத்தமும்
ரொட்டி,வடை போண்டா மணமும்

ரோஜா மல்லி வண்ணமும்
ரௌத்ரம் அறியா ரயில் பயணம் இனிதே!

கவிஞர் நீலாசுபாஷ் ஆக்கூர்

# மாலை நேரத்து மயக்கம்

சாயங்காலமா மனதே
சாயுங்காலமா கனவில்.
சாயம்பூசம் வானவில்
சாய்ந்தாடுமே நினைவுகள்

அழகான ஆதவனும்
அன்பின் படிவம்
ஆரவாரமாகச் சொல்ல
ஆறானதோ இன்பங்கள்



மடியில் தவழும்
மன்மதக் கோட்டைகள்
இருளும் ஒளியும்
இன்பமாய் சங்கமங்கள்.

நிலாவின் உலா
நில்லாத தயாரிப்புகள்
சிவப்புக் கம்பளம்
சில்லான தென்றல்

உலகமோ வரவேற்கும்
உன்னத கணங்கள்
உயிரோடு உரசும்
உன்மத்த பரவசங்கள்.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# பயணக்குறிப்பு

## பயணக்குறிப்பு

விவசாயி மகளின்
பயணக்குறிப்பு
நீ
நீதான்
நீமட்டும்தான்.

****

## நிஜ-நிழல்

உன் நிஜத்தில் நான் நிழலாகவும்
உன் நிழலில் நான் நிஜமாகவும்
உன் நித்தமும் நிஜ-நிழலாக
உன் பயணம் முழுவதும்
என் பயணம் தொடரும்.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# ஆரா

அவள் பேசும் பைங்கிளி
அவளுக்குச் செல்லமாக
நானே பெயர் வைத்து அழைத்தும் பார்த்தேன்
ஆரா தேன் ஊறும் சுவை கோரா
சொல்லிக் கொடுப்பதை
கொலரி கொலரி கற்றுக்கொள்வாள்
நான் என்றால் அவளுக்கு பிடித்தம்
எனக்கும் அவள் மிக பிடித்தம்
அவள் கூட்டுக்குள் இருந்ததை விட
துப்பட்டா மறைவில் என் தோளிலிருந்து
காதணியோடு கொஞ்சிக் கொள்வாள்
காதைக் கூட தன் அலகால் கொத்திச் சிலிர்க்க வைப்பாள்
எனது படுக்கையில் அவளுக்கு நடமாட பிடித்தம்
நுளம்பு வலைக்குள் நாம் இருவரும் செல்ல மொழி
பேசிப் பேசிட அவள் கால்களின் பக்கம் நின்று கொண்டு
என் விரல் நகங்களுடன் சண்டை இட்டுக் கொண்டு நிற்பாள்
நான் தூங்கத்தை தொட்டுத் திடுக்கிட்டு எழும்போது
சமத்தாக என் தலைக்கு அருகில் அவளுக்காகப்
போடப்பட்ட படுக்கையில் தூங்கியிருப்பாள்
செல்ல முத்தம் வைத்ததுடன்
சிணுங்கும் குழந்தையாய் மாறிடுவாள்
தட்டி கொடுத்தாள் தூங்கி விடுவாள்
கூட்டில் இளைப்பாறியதை விட
என்னைச் சுற்றிக்கொண்டு தான் இருப்பாள்
அன்று மட்டும் என்றானதோ
அவளுக்குச் சுதந்திரம் தந்திருந்தேன்
அவளோ சிறகு விரித்து
விண்ணில் செல்ல தவித்துப் போனேன்
அவளுக்குப் பறக்கத் தெரியாது
எங்கோ மூளையில் உயிர் வாழ வேண்டும் என்று
அவ்வப்போது பிரார்த்தனை செய்கிறேன்



கவிஞர் சஹ்னாஸ் பேகம்,முதலைப்பாளி(இலங்கை)

# சிலப்பதிகாரம் (இருபத்தி நான்கு)

23. கட்டுரை காதை.

1. மதுராபதி தெய்வம் தோன்றுதல்

வலக்காலில் வீரக்கழல், இடக்காலில் சிலம்புடன் தோன்றினாள்
குலதெய்வமான மதுராபதி பாண்டிய மன்னனின் காவல் சாமி
பலகாலமாக மன்னனின் புகழை உலகமே பாராட்டச் செய்தவள்
சில நிகழ்வுகளில் கண்ணகியிடம் மன்னிப்புக் கோரினாள்

2. பாண்டியர் பெருமையை உரைத்தல் .

எனது மன்னன் காதில் வேத மந்திரங்கள் ஓசைதான் கேட்கும் '
மனது வலிக்கும் ஆராய்ச்சி மணியோசை கேட்டதே இல்லை
தனது என்றில்லாமல் எல்லாம் மக்களுக்கே என்று வாழ்பவன்
எனவே பெண்கள் தனியே வீட்டில் பயமின்றி வாழ்வார்கள் .

பரவலான பேச்சுக்கிடையே அவன் அவளை விட்டுச் சென்றான்
தரமான வணிகம் முடிந்து ஒரு நாள் வீடு வந்தான் கணவன்
இரவில் நகர் சோதனையில் வீதியில் நடந்து வந்தான் மன்னன்
ஒரு மனையில் பேச்சுக் குரல் கேட்டது , கதவைத் தட்டினான்

"இதுவரை என்னைக் காத்த காவல் இன்று காவாது போகுமோ?"
இது கேட்ட மன்னன் தட்டிய தன் கரத்தை வெட்டிக் கொண்டான்
"எது சரியோ அது நன்றாகவே நடக்கிறது", நீதி தவறாத மன்னன்
அதனால் பொற்கைப் பாண்டியன் என்னும் பெயர் பெற்றான்

3. சேர. சோழ மன்னர் பெருமை உரைத்தல் :

குருச்சேத்திரப் போர் பாண்டவர்கள் கௌரவர்கள் நடக்கிறது
பெருஞ்சோறு படைத்தான்பாண்டியன் உதியன் சேரலாதன்
இருசாராருக்கும் உணவிட்டதால் பெருஞ்சேரலாதன் ஆனான்
பெரும் பாரத யுத்தம் முடிந்தும் சேரன்பேர் நிலைத்து நிற்கிறது

பருந்து துரத்திய புறாவைக் காப்பாற்றினான் சோழன் சிபி
அருந்த வந்த பருந்துக்கு உணவாக தராசு தட்டில் ஏறினான்
தருமம் காக்க கன்றினைப் பறிகொடுத்து நீதிகேட்டது பசு
அருமை மகனை தேர்க்காலில் இட்டவன் மனுநீதி சோழன்

4. 5. பாண்டியன் குற்றமும், மதுரைக்கான சாபம் :

பாலகன் தட்சிணாமூர்த்தி மழலையோடு வேதங்களை ஓதினான்
சாலச்சிறப்புடன் பிழையின்றி கேட்டான் பராசரன் அந்தணன்
மாலைசூடி பொன் ஆபரணங்களை அவனுக்குக் கொடுத்தான்
பாலகன் தந்தை வார்த்திகன் கள்வன் என சிறையில் அடைத்தனர்



இதைக்கேட்ட மனைவி கார்த்திகை மிகவும் அழுது புலம்பினாள்
எதைவைத்து என் கணவனை தண்டித்தீர்கள் நியாயம் கேட்டாள்
பதைபதைத்த பாண்டியன் தனது அரசு நீதி தவறியதை அறிந்தான்
"சிதைந்தது செங்கோல் இதனால் ஒருநாள் மதுரை எரியும்" என்றாள்

6. மதுராபதி தெய்வம் சங்கமன் கதை உரைத்தல் :

கபிலபுரத்தின் அரசன் வசு, சிங்கபுரத்தை ஆளுபவன் குமரன்
எலியும் பூனையுமாக இரு பங்காளிகள் ஓயாத சண்டைதான்
வலிய வந்த சங்கமன் சிங்கபுரத்தில் வியாபாரம் செய்தான்
சலிகை வேண்டி அரசனிடம் சங்கமன் ஓர் ஒற்றன் என்றான்

சங்கமன் விசாரணை இன்றிஅரசனால் கொல்லப் பட்டான்
தங்கமான கணவனை இழந்த மனைவி நீலி அழுது புரண்டாள்
அங்கிருந்த மக்களைக் கூட்டி இது நீதியோ என்று அரற்றினாள்
பங்கமழிந்தபின் வாழ்வதா மலையுச்சியில் ஏறி உயிர்துறந்தாள்
(சங்கமனை காட்டிக்கொடுத்த பரதன் இப்பிறவியில் கோவலன் )

**தொடரும்...**

கவிஞர் ந.திருக்காமு

# தூக்கம் தொலைத்த இரவு

குணக்கடல் கரையில்
கண்ணீருடன் கரையர்!
நஞ்சு உமிழ்ந்த ஆலை
நனைந்த இரவு!
அழுகை துடைத்திட யாரும்
இல்லை!
அலறல் கேட்ட ஆதவனும்
எழ வில்லை!
அல்லல் பொழுதில் அலைக்குடி
ஆறுதல் இல்லா கையறு நிலை!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# ஆதிரை நாயகனே!

கோடிக்கணக்கில் ஜீவிதங்கள்
இங்கே குடி கொண்டோம்
அப்பா ஈசா! உம்
அருளில் பிறந்திட்ட
மனிதப் பிறவியாம்
யாம் அனைவரும்;



நீல வானமென்னும்
ஒற்றைக் கூரையின் கீழே
ஒன்றுபட்டு வாழ்ந்திட
நீயும் எம்மைப்
பணித்திருந்தாலும் ;

ஒவ்வொரு வாழ்விலும்
எதிர் இருப்போருக்குப்
புலப்படாத;
ஒவ்வொரு விதமான
புரிதலும்,

அவரவர் எண்ணங்களுக்குள்ளும்
ஒளிந்து கிடக்கும்
ஓராயிரம் ரகசியங்களும்
எதிரே காணும்

ஒவ்வொரு மனிதனின்
சிரசிற்கு மேலும்
ஒவ்வொரு கூரை தெரிகிறதோ
என்ற எண்ணமும் எழுகிறதே!

குழம்பித் தவித்திடும்
ஏழை மகளுக்கும்
என்றைக்கும் எவராலும்
மறுப்பளிக்க முடியாத விடை
சொல்லி வாழ வைத்திட

வருவாய் எங்கள்
ஆதிரை நாயகனே
ஈசனே சிவகாமி நேசனே
என்னை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே!

கவிஞர் மலர் அபி

# உலகமும் உழவனும்

உலகமும் உழவனும்
ஒன்றியிருந்த காலமொன்று உண்டு.
அது இறந்த காலம் இன்று

எருதுகள் ஏரிழுக்க ஏறுழவன்
வியர்வையிலே விளைந்த நிலம் உண்டு.
அது பாலைவனம் இன்று.

கழனியிலே கால்புதைந்து
நாற்று நட்ட காலமொன்று உண்டு.
இயந்திரத்தில் இயங்கி வருது இன்று.

களை பிடுங்கும் குமரிகளுக்கு களைப்புப் போக்க
பாணர் பாடிய காலம் ஒன்று உண்டு.
விடம் கொடுத்து களையெடுக்கும் காலமிது இன்று.



களரிகட்டி கூத்தாடி களத்துமேட்டில்
சூடுமிதித்த காலமொன்று உண்டு.
அறுவடை இயந்திரத்தில் அறுவடையாம் இன்று.

உறவுகள் உரிமை கொண்டு
ஊதியமின்றி உதவிசெய்த காலமொன்று உண்டு.
உதவிக்கு காசிபணம் முக்டியமது இன்று.

மாரிமழையும் தான்பொழிய
மடைத்தலையும் நிரப்பி வழிந்த காலம் ஒன்று உண்டு.
மழைவேண்டி மாரியெல்லாம் தவம் இருக்கிறார் இன்று.

இயற்கையிலே உரமெடுத்து
பயிர் வளர்த்த காலமொன்று உண்டு.
இரசாயன கழிவுக்கொட்டி அழிவு செய்கிறார் இன்று.

உலகமும் உழவனும்
ஒன்றியிருந்த காலம் ஒன்று உண்டு.
அது இறந்த காலம் இன்று.

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு (இலங்கை)

# புத்தாண்டு மலரட்டும்

அன்பே என்றும் இவ்வுலகை ஆளட்டும்
ஆறுதல் உரைத்திடும் நட்பு மலரட்டும்

கல்வி எனும் ஆயுதத்தால் கயமைகள் மாறட்டும்
கல் நெஞ்சமும் மாறி கண்ணியத்துடன் உதவட்டும்

பொய் பொறாமை களவு கையூட்டு
கண் காணாமல் தொலைந்து போகட்டும்

கருணை நிறைந்த மனிதர்கள்
இப்புவிதனை அமைதியாய் கையாளட்டும்

இயற்கை அன்னை இன்னிசை சேர்க்கட்டும்
விவசாயமும் விவசாயிகளும் ஒருங்கே செழிக்கட்டும்




சாதி மதப் பித்து தொலைந்து
சமத்துவம் என்றும் நிலைக்கட்டும்

உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற
எண்ணம் அறவே ஒழியட்டும்

தீய எண்ணங்களை தீயிலிட்டுக் கொளுத்துவோம்
நேர்மறை எண்ணங்களை மகிழ்வாய் வரவேற்போம்

புத்தாண்டு மலரட்டும் புத்துணர்வுடனே
புத்தாண்டு அனைவருக்கும் நலமாய் சிறக்கட்டும்

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# தீயன களைக

உயிர் உடலில்
ஒட்டிக்கொண்டிருக்கும் வரைதான்
உலகம் உனக்கு நாடக மேடை.

எழுதப்பட்ட விதியின்படி
நீ அறிந்து கொள்ளாமலே நொடியில்
யாவும் களைந்து போகும்.

உயிரோட்டமான
உன் நாடக பாத்திரங்களுக்கான
உன் கூலியும் காத்திருக்கும்.

உனக்கு நீயே என யாவுமாகிப்போன
அந்தப் பரந்த வெளியில்
நீயும் நானும் அனாதையாகி விடவேண்டாம்

எனக்கும் உனக்குமான
பரிசுத்தமான மீள்தலுக்காக
காலம் இன்னும் காத்திருக்கிறது

அந்நாளில் அனைத்தும்
நல்ல வகை கூறல்களாகட்டும்
எனக்காகவும் பிரார்த்தித்துக் கொள்.



கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# அனல்காற்று வீசும் மத்தியானம்

உச்சி வெயிலில்
வீட்டின் முற்றத்தில்
உலர்த்திய தானியங்களை
வந்து கொறிக்கும் அணிலின்
சத்தம் கேட்டும் தூக்கத்திலிருந்து
எழாத பாட்டி.
விழித்திருந்தும் விரட்டாத நான்
கவிதைகளை எழுதி
பசியா(ற்)றிக்கொண்டிருக்கிறேன்.



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# பகவானின் அருளோடு

பறந்துவிரிந்த வாழ்வு கடலிலே
படகுபோல மிதந்திடவே

பகல்இரவாய் மகிழ்ந்திடவே
பனியாக குளிர்ந்திடவே

பன்னகமாய் தழைத்திடவே
பனையாக வளர்ந்திடவே

பள்ளிப்படிப்பையும் முடித்திட்டே
பளிங்கியாக பளபளத்தே

பழுவமாக இணைந்திருந்தே
பழிச்சுதலும் பெற்றிட்டே

பழனமாய் விளைந்திட்டே
பசுமையாக தழைத்திட்டே



பல்லியமும் இசைந்திட்டே
பல்லாண்டு வாழ்ந்திடவும்

பல்லியமாக குலுங்கிட்டே
பரோபகாரமும் செய்திட்டே

பருவதமாய் படர்ந்திட்டே
பரிவு பாசத்தோடே

பருதியாய் ஒளிர்ந்திட்டே
பரியகமாய் ஒலித்திட்டே

பரிசுத்தமாய் இருந்திட்டே
பரகதியடைந்திட்டே

பயத்தையும் ஒதுக்கிட்டே
பதவியையும் அடைந்திடவே

படைத்தவனையும் தொழுதிட்டே
பசிதமும் தரித்திட்டே

பகவானின் அருளோடு
பகடுவாழ்வு வாழ்ந்திடலாமே!

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# கனாக்களின் பின்னே

தன்னிறைவின் தலைமகனாய் தேசம் நிமிர
தனக்கான கடமையை குடிமகன் உணர
மதுவில் மூழ்கி மயக்கத்தில் கிடக்கும்
வருங்காலத் தூண்களை திசை மாற்றிட
அதிகார போதையில் ஆணவம் தலைதூக்காதிருக்க
உழவின் பசுமையில் உலகம் தலைதூக்க
இயற்கையின் அரவணைப்பில் சூரியன் இளைப்பாற
சமத்துவக் காற்றில் சமூகம் மூச்சுவிட
வன்கொடுமை குழிகளுக்குள் பெண்மை வீழாதிருக்க
வன்முறை களத்தில் பிஞ்சுகள் கசங்காதிருக்க
பண்பாட்டின் வேர்களை படரவிடும் மனமிருக்க
மொழியின் ஆளுமையை உள்வாங்கும் தலைமுறையாகிட
திரையின் பிம்பத்தில் தன்னைத் தொலைக்காதிருக்க
அறிவின் தளத்தில் வரலாற்றை உணர
அழிவின் விளிம்பில் நுழையும் கலைகளை
தளிர்க்கச் செய்யும் ஆசையென விளையும்
எல்லாக் கனவுகளும் ஈடேறும் சிறப்பெனவே.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# பூங்காற்றிலே என் சுவாசத்தை

தனிமையும் துணை தேடும் நேரமிது
நான் பேச உனையன்றி துணை வேறுஏது
புலன்கள் மீட்டிடும் என் பூங்காற்றே - இவள்
இதயம் தீட்டும் இசைகேள் சற்றே

உறவாக உரிமையாக உடன்வரும் - தினம்
உள்ளுக்குள் உறுத்தும் வலிதான்
வலி மறுத்திட,மருந்திட, மறந்திட
இல்லை இங்கொரு வழிதான்


அன்று ஒரு மார்கழி திங்கள் தேதி
குளிரும் போர்வை தேடும் வெண்ணிற வீதி
நாள்முடிய காய்ச்சல், உளறல், மயக்கம் அவதி
நினைவுகள் மட்டுமே இன்று மிச்சம்,மீதி

மனம்விட்டு பேசினால் தீர்ந்திடுமோ?
ஒருமுறை என்னை இறுக்கிக்கொள்
மனஇறுக்கம் தீர வழியில்லையோ?
இப்படியே என்னை இறுக்கிக்கொல்

அதிசயக் காற்றே உனக்கொன்று தெரியுமா?
அச்சிடப்படாத என்முதல் கவிதை நீ
அன்றாடம் கனவில் வந்து
அன்பே! புதுக்கவி விதை நீ

கம்பன்,கலிப்பா,கீதாஞ்சலி உன்
இலக்கிய சிறையில் நான் கைதி
ஆதலால் சொல்லித் தீர்த்தேன்
மலைக் கணக்கில் பல செய்தி

மனதில் பட்டதை நானும் உளறிவிட்டேன்
வைத்துக்கொள் மிகவும் ரகசியமாய்
இதற்கு உனக்கு கூலி வேண்டுமா?
பெற்றுக்கொள் என் ஆயிரம் முத்தங்கள்



கவிஞர் ச.நந்தினி

# ஆண்டாளாய் வேண்டுகிறேன் ஆட்கொள்ளடா

உன்னை நினைத்து
உள்ளமும் உருகிட
துன்பக்கடலில் நீந்தித்
துதிக்கின்றேன்

விழிகளும் தேடியே
விந்தையும் புரிந்திட
வழிகாண வரம்கேட்டு
வருந்துகிறேன் கண்ணா



மயக்கும் மாயவா
மகேசா நீயே
வியனுலகில் உன்னையே
விருட்சமாய் வளர்க்கிறேன்

நெஞ்சத்தில் நிறைந்த
நேசத்தால் தவிக்கிறேன்
தஞ்சம் கொடுத்திட
தயவாகவா தர்மசீலனே

ஏந்திழை என்னை
ஏற்றிடு கருநீலவண்ணா
சந்தம் பாடியே
சல்லாபம் காண்கின்றேன்

மார்கழியின் மதிவானா
மனதிற்குள் குடியானாய்
பார்போற்றும் பார்த்தீபா
ஆண்டாளை ஆட்கொள்ளடா

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# நெடுந்தூரம் நீதி இல்லை

பிறவி தொடரில் ஏராளம் மனித களத்தில்
இன்று நேற்று நாளை கரம் இன்றி காலத்துடன்
நிலையில்லா நீதிச்சுடரும் நீர் அமைத்த உலகில்
யார் யார் எதற்காக இன்னும் பழியில்லா
பாசறை பன்முக மனித குலத்தில் மனம்
தீட்டிய நிபந்தனை ஏராளம் நாட்டில் ஏன்
ஏழைக்கு ஏதுமில்லை நீதிக்கு நாடும் இல்லை
அரக்கனும் அகிலம் ஆழ்கிறான் அன்னத் தொடரில்
அரங்கேற்றம் புதுப்புது ஏடுகளில் தனக்கொரு நீதி
தான் தீட்டிய சட்டம் சமம் இல்லாமல் நித்தம்
ஒவ்வொரு நாட்டிலும் மிச்சம் யாருக்கு வேண்டும் அச்சம்
அடிமைச்சங்கிலி போல் வழி இல்லாமல் நெடுந்தோறும்
நீதி எங்கே?



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# நாவு

சாக்கடையில் இருந்து வரும் துர்நாற்றத்தை விட
மிக மோசமான ஒரு ஆயுதம் இந்த நாவு
காதால் கேட்பதையெல்லாம் பேசுவது இந்த நாவால் தானே
கண்ணால் பார்க்காத எல்லாம் பேசுவதே இந்த நாவால் தான்

நல்லவன் யார் கெட்டவன் யார் என்று தெரியாமல்
நல்ல குடும்பத்தையும் பிரித்து வைப்பது இந்த நாவு தான்
உயிர் பிரிந்த பின்பு செத்துப் போய்விடும் நாவே!

சுத்தம் செய் சுத்தம் செய் முதலில் உன் நாவை
அசுத்தம் என்பது துர்நாற்றம் அல்ல
உன் நாவால் வெளிவரும் பல மனதை நோகடிக்கும்
வார்த்தைகள் தான்

நல்லது செய்ய நினைத்தாலும் ஒருவர் கூறியதை
சரிவர விசாரிக்காமல் நாவல் பேசாதே
குடும்ப உறவுகள் பிரிந்த பின்பு
உன் நாவுக்கு சந்தோஷமாக இருக்கலாம்

ஏ! நாவே மரணம் வந்தால் நீ மரணித்து விடுவாய்
என்பதை மறந்து விடாதே
அப்போது உன் ஆட்டம் நின்றுவிடும்
பல பழமொழிகளை வாய்மொழியாய் சொன்னது
வாழ்க்கை தத்துவத்திற்காக தான்



மனிதனின் குறைகளை உன் நாவால் பேச
உனக்கு நேரம் இருக்கிறது என்றால்
உன் குறைகளை திருத்துவதற்கு உனக்கு
நேரம் உண்டு என்பதை மறந்து விடாதே

நரம்பு இல்லாத நாக்கு வளைந்து வளைந்து பேசும்
தேனை போல் இனிக்கும்
இந்த உலகில் நீ தப்பித்துச் செல்லலாம்
இறைவனிடம் இருந்து தப்பித்துச் செல்ல முடியாது
என்பதை மறந்து விடாதே

கவிஞர் சபியா பானு,கம்பஹா

# மாலவனும் வைணவமும் (பகுதி 15)

## மதுரகவியாழ்வார் (பாகம் 2)

ஆழ்வார்கள் சென்னைநகர் தமிழகத்தில் தோன்றிடினும்;
தென்னகத்தும் வடக்கிருக்கும் தலமெல்லாம் தரிசித்தும்
மாலவனைப் பூசித்தும் மங்களாசா சனங்கள்பல
அர்ப்பணித்தும் வைணவத்தை பரப்பியமை ஏற்றமிகு
கைங்கர்யம்! அயோத்திநகர் வாழ்ந்தக்கால் தெற்கினிலே
ஓரதிசயம்! திருக்குருகூர் புளியமரத் தடியினிலே
நம்மாழ்வார் சமாதிநிலை நீடுவதில்; கல்லெறிந்து
கலைத்திட்டார் மதுரகவி ஆழ்வாரே! "செத்ததனின்
வயிற்றினிலே, சிறியதொன்று பிறந்திட்டால்; அன்னதது
எதனைத்தான் தின்றிருக்கும்? எங்கேயது கிடக்கு?மென்ற
வினாவினுக்கு; அதனையே தின்றவது தானங்கே
கிடக்குமென விடைபகர்ந்தார்! இலைமறைகாய் அன்னதுவாய்;
ஆழ்தத்துவ விளக்கமதாய் வைத்தசீர்மை நம்மாழ்வார்
மதுரகவி உரையாடலில் வெளிப்பாடே! ஆத்துமாதான்
உடல்பெற்றால் புண்ணியத்தை பாவத்தை நுகர்ந்திட்ட
வாழ்வதனால் மிளிர்ந்திடுமே! சித்திரையில் திருநக்ஷத்திரம்
உற்றவர்கள்: மதுரகவி, ராமானுஜர், வடுகநம்பி,
கிடாம்பியாச்சான், எங்களாள்வான், உய்யகொண்டார், முதலியாண்டான்,
அனந்தாழ்வார் , பெரியதிரு மலைநம்பி, போன்றோரின்
அவதாரம் ஆனதுவே! மாலவனின் தோற்றங்களில்
மச்யமதும் நரசிம்மமும் இந்நாளே! பகவானும்
ஆச்சாரியர் முத்திறத்தார் தோற்றத்தால்; முப்புரியும்
ஊட்டியதாம் மாதமென ஏற்றத்தைக் கண்டதுவும்
சித்திரையே! ராமகாதை சத்ருக்ணனின் ஒப்பானவர்
மதுரகவி! நம்மாழ்வார் திருவுருவை திருக்குருகூர்
வைத்திட்டார் மதுரகவி! நம்மாழ்வார் முன்தோன்றி;
அவர்பின்பும் வாழ்ந்தவரே மதுரகவி! ஆசாரியர்;
மாலவர்க்கும் வைணவத்திற் குபக்திமிக்கார் மதுரகவி!
தமிழினிலும் சமஸ்கிருத புலமைமிக் கார்; ஒழுக்க
சீலரவர்! வைணவ, மால் நெறிநீடுக!




மதுரகவி முற்றிற்று! குலசேகரர் தொடர்வோம்

கவிஞர் கனக்காயன் (இ சே இராமன்)

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -16 பிரச்சினையிலே திருமணம்



பல் விளக்கி விட்டு காபி குடித்த சிவா "என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை" "சரி விடு நேற்று நண்பர்கள் கூட்டத்திலே கூட பேசிக் கொண்டார்கள். திவ்யா உன்னை அத்தா என்று கூப்பிடுவதில் எனக்கும் விருப்பமில்லைதான். இருந்தாலும் என் நண்பர் குடும்பத்தில் உன்னிடம் அப்படி கேட்டிருக்கக் கூடாது. அவர்கள் மிகவும் சாதாரணமாகத்தான் கேட்டார்கள். ஆனால் என்னால் கூட தாங்க முடியாமல் போய் விட்டது."

"பரவாயில்லை"

"மற்றவர்கள் பேசுவதற்கெல்லாம் அவர்கள் திருப்திப் படும்படி நாம் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. நாம் நமக்காகத்தான் வாழ் வேண்டும்."

"நான் அந்த சம்பவத்தை அப்போதே மறந்து விட்டேன்."

"ஆனால் உன் முகம் இன்னும் அந்த சம்பவத்தையே நினைவு படுத்திக் கொண்டிருக்கிறதே. ராத்திரி முழுவதும் தூங்க வில்லையா?"

"நன்றாகத் தூங்கினேன்."

"கண்கள் நன்றாகச் சிவந்து போயிருக்கின்றன. வீணாக பொய் சொல்கிறாய்?"

"சரி விடுங்கள்." என்று பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "சீக்கிரம் கிளம்புங்கள் எனக்குத் திவ்யாவை புறப்பட வைத்து ஸ்கூலுக்குக் கொண்டு போய் விட வேண்டும்."

"சரி" என்று காபி டம்ளரை திரும்பக் கொடுத்தவன் "திவ்யாவை ஸ்கூலில் விட்டு விட்டு நீ கடைப் பக்கம் வருகிறாயா? நீயும் வீட்டிலே உட்கார்ந்து போரடித்துப் போயிருப்பாய். அங்கே வந்தால் உனக்கும் கொஞ்சம் மாறுதல் கிடைக்கும். வரும்போது பழங்கள் எல்லாம் வாங்கி தந்து அனுப்புகிறேன்."

"நான் கூட கேட்க வேண்டுமென்று நினைதேன். நீங்களே சொல்லி விட்டீர்கள். இங்கேயே அடைந்து கிடந்து கொண்டு... மிகவும் கஷ்டமாகத் தானிருக்கிறது."

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -16 பிரச்சினையிலே திருமணம்

"ரொம்ப நன்றி அத்தான்."

இதற்கெல்லாம் எதற்கம்மா நன்றி. திவ்யா எத்தனை மணிக்கு ஸ்கூலுக்கு போக வேண்டும்.", "எட்டு மணிக்கு"

"சரி நீ அவளை எழுப்பி புறப்பட வை. நான் ஒரு போன் பண்ணி விட்டு வருகிறேன். ஆங்... சொல்ல மறந்து விட்டேன். இன்றைக்கு நம்ம வீட்டிற்கு ஜெயமோகன் வருவதாக போன் பண்ணியிருந்தான்."

"ஜெய மோகனா?"

"என்ன புவனா தெரியாத மாதிரி கேட்கிறாய். உனக்கு அவனைத் திருமணம் செய்து வைக்க முடிவெல்லாம் செய்து... அப்புறம் ஏதோ பிரச்சினையிலே திருமணம் நின்று நின்றுபோய் விட்டதாம்."

"………." ஒன்றும் பதில் சொல்லாமல் சிவாவின் முகத்தைப் பார்த்தாள் புவனா.

"மும்பையிலே பாண்டூப்பிலே அவனுடைய அக்கா வீட்டிலேதான் தங்கி இருக்கிறான். என்னுடைய பாஸ்போர்ட் விஷயமாக பேசிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் இன்றைக்கு காலையிலே இந்தப் பக்கம் வேலை இருக்கிறது வந்து பார்த்து விட்டு பேசி விட்டுப் போகிறேன் என்றான்."

"உங்களுக்கு எதற்கு பாஸ்போர்ட். வெளி நாடு போகிறீர்களா?'

""ஆமாம். ஒரு சிங்கப்பூர் பார்ட்டிக்கு காய்கறிகளும் பழங்களும் ஏற்றுமதி செய்யலாம் என்றிருக்கிறோம். அது விஷயமாய் அவனைப் போய் சிங்கபூரில் பார்த்து வர வேண்டியது இருக்கிறது.

"பாஸ்போர்ட் அப்ளை பண்ணியாச்சா?"

"ஆமா, ஜெயமோகன் வந்தால் உட்கார சொல்.நான் இப்போது வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு கிளம்பினான் சிவா.

தொடரும்...

இரஜகை நிலவன்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கட்டுரை



**அன்னை மொழியே! அழகார்ந்த !**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாசெந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியேட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

-பாவலரேறு

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்(மார்ச் 10, 1933 — சூன் 11, 1995) இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர் ஆகியோரின் கொள்கை கற்றவர்களிடமும், மற்றவர்களிடமும் பரவப் பெருங்காரணமாக விளங்கியவர். தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன்தமிழகத்தில் முதன்முறையாக வந்த காலத்தில் அவரையும் அவரது தோழர்களையும் அரணாகக் காத்து அவர்களை வளர்தெடுத்தவரும் இவர்தான். 20 முறை சிறை சென்றும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் தமிழீழப் போராட்டம் வரை இவரது செயல்பாடுகள் தமிழர்கள் நடுவில் வியந்து போற்றப்படுகின்றன.**

**"என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்**
**எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் - வேறு**
**எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்! - வரும்**
**புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்**
**பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! - இந்த(ப்)**
**பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!''**

**என்று எழுதி அதன்வழி வாழ்ந்துகாட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார்.**

## கல்வி:

**பெருஞ்சித்திரனார் பள்ளியில் பயிலும் காலத்தில் தமிழ் ஈடுபாட்டுடன் கற்றவர். "குழந்தை' என்னும் பெயரில் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி மாணவர் பருவத்தில் நடத்தியவர். பின்பு அருணமணி என்னும் புனைபெயரில் "மலர்க்காடு' என்னும் கையெழுத்து ஏட்டினை நடத்தினார்.**

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கட்டுரை

**கல்வி:**

மல்லிகை, பூக்காரி என்னும் பாவியங்களைப் பள்ளிப்பருவத்தில் இயற்றிய பெருமைக்குரியவர்.

பெருஞ்சித்திரனார் 1950இல்பள்ளிப்படிப்பை நிறைவு செய்த பின்னர், சேலம் நகராட்சிக் கல்லூரியில் பயின்றார். பாவாணர் அங்குப் பணிபுரிந்தபொழுது அவர்தம் மாணவராக தமிழறிவு பெற்றார். இளமையில் பெருஞ்சித்திரனாருக்கு உலக ஊழியனார், காமாட்சி குமாரசாமி முதலானவர்களும் ஆசிரியர்பெருமக்களாக விளங்கினர்.



கல்லூரியில் பெருஞ்சித்திரனார் பயிலும் காலத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் விளங்கினார். எனவே தாம் இயற்றிய மல்லிகை, பூக்காரி என்னும் இரு பாவியங்களையும் எடுத்துக்கொண்டு பாவேந்தரைச் சந்திக்க புதுச்சேரி சென்றார். ஆனால் பாவேந்தர் அந்நூல்களைப் பார்க்க அக்காலத்தில் மறுத்துவிட்டதையும் பின்னர் ஒரு நூலைக் கொய்யாக்கனி எனும் பெயரில் அவரே அவர் தம் அச்சகத்தில் அச்சிட்டுத் தந்ததையும் பெருஞ்சித்திரனார் குறிப்பிடுவதுண்டு.

பெருஞ்சித்திரனார் கல்லூரியில் பயிலும் போது கமலம் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அப் பெண்ணே தாமரை அம்மையாராக இன்று மதிக்கப்படுபவர்.

**தென்மொழி இதழும் எழுத்துப் பணியும்:**

பெருஞ்சித்திரனார் புதுவையில் அஞ்சல் துறையில் முதன்முதலில் பணியில் இணைந்தார். ஐந்து ஆண்டுகள் புதுவையில் வாழ்க்கை அமைந்தது. அக்காலத்தில் பாவேந்தருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

குமர தர்மசீலன் இதழாசிரியர்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கட்டுரை

**தென்மொழி இதழும் எழுத்துப் பணியும்:**

1959 இல் பெருஞ்சித்திரனாருக்குப் பணிமாற்றல் கிடைத்து கடலூருக்கு மாற்றப்பட்டார். இச்சூழலில் பாவாணர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்அகரமுதலித் துறையில் பணியேற்றார். பாவாணர் விருப்பப்படி தென்மொழி என்னும் இதழை1959இல் பெருஞ்சித்திரனார் தொடங்கி நடத்தினார். அரசுப் பணியில் இருந்ததால் தன் இயற்பெயரான துரை-மாணிக்கம் என்பதை விடுத்து பெருஞ்சித்திரன் என்னும் புனைப்பெயரில் எழுதினார்.



தென்மொழியின் தொடக்க ஏட்டில் சிறப்பாசிரியர் பாவாணர் எனவும் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன் எனவும் பெயர்கள் தாங்கி இதழ் வெளியானது. தென்மொழியின் 16 இதழ்கள் வெளிவந்த சூழலில் பொருள் முட்டுப்பாட்டால் இதழ் இடையில் நின்றது. பின்பு கருத்துச் செறிவுடனும் புதுப்பொலிவுடனும் மீண்டும் வந்து கல்லூரி மாணவர்கள் தமிழாசிரியர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது.

தமிழ்ப்பற்றும் தமிழ் உணர்வும் கொண்டு தம் பாட்டு ஆற்றலால் இதழை நடத்திய பெருஞ்சித்திரனார் அக்காலத்தில் சுடர் விட்டு எழுந்த இந்தி எதிர்ப்புப் போரில் தம் உரையாலும் பாட்டாலும் பெரும் பங்காற்றினார். இந்தி எதிர்ப்புப் போரில் இவர்தம் தென்மொழி இதழிற்குப் பெரும் பங்குண்டு. தம் இயக்கப்பணிகளுக்கு அரசுப்பணி தடையாக இருப்பதாலும் முழுநேரம் மொழிப் பணியாற்றவும் நினைத்து அரசுப்பணியை உதறினார். இவர் எழுதிய பாடல்கள் இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவதாக அரசால் குற்றம் சாற்றப்பெற்றது. இவருக்கு இதனால் சிறைத் தண்டனை கிடைத்தது.வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது ஐயை என்னும் தனித்தமிழ்ப் பாவியத்தின் முதல் தொகுதியை எழுதினார்.

குமர தர்மசீலன் இதழாசிரியர்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கட்டுரை

**தமிழ்த்தேசிய விடுதலைப் போராளி:**

"விடுதலை வேண்டும் முதல் வேலை
எந்த வேலையும் செய்யலாம் நாளை"...

-மேற்படி பாடலில் பெருஞ்சித்திரனார் வேண்டிப் பாடிய விடுதலை என்பது தமிழ்நாடு விடுதலையைக் குறிப்பதாகும்.

1956ஆம் ஆண்டு மொழிவழித் தமிழகம் அமைந்த பிறகும் தனிக் கழகம் கண்ட அண்ணா திராவிடநாடு கோரிக்கையை கைவிடத் தயாரில்லை. இந்நிலையில் 1959ஆம் ஆண்டு தமிழ்மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், தமிழ்நாடு விடுதலை ஆகிய மூன்று கொள்கையை முன் வைத்து தென்மொழி இதழை பெருஞ்சித்திரனார் தொடங்கினார்.

**மறைமலையடிகள் வழியில் பெருஞ்சித்திரனார் :**



தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகள் வழியில் தேவநேயப் பாவாணர் தென்மொழி இதழில் சிறப்பாசிரியராகச் செயல்பட்டார். 1963ஆம் ஆண்டு பிரிவினை தடைச் சட்டம் வந்த போது அண்ணா பயங்கொண்டு திராவிட நாடு கோரிக்கைக்கு முழுக்கு போட்டார். இவரோ ஆட்சியாளருக்கு அடங்கிட மறுத்தார். தனது தென்மொழி ஏட்டிலே, "இந்திய நாட்டின் ஒற்றுமை உணர்வை விடப் பன்னூறாயிரம் மடங்கு உயர்ந்து வலிந்தாகும் தமிழக விடுதலையுணர்வு. அதைச் சட்டத்தால் அடக்குதல் சீறும் புயலை மீன் வலை கொண்டும் மடக்கும் செயல்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

குமர தர்மசீலன் இதழாசிரியர்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கட்டுரை

**பெரியாரும் பெருஞ்சித்திரனாரும்:**



1965ஆம் ஆண்டு மொழிப்போரின் போது பெரியார் மீது கடும் சினம் கொண்டார். இந்தியைப் படிப்பதில் தவறில்லை என்று பெரியார் பேசியதைக் கண்டித்து "பெரியார் செய்த பெரும்பிழை" என்று தென்மொழியில் எழுதினார்.

பெரியாரின் தமிழ் மொழி எதிர்ப்பை கடுமையாகச் சாடி "பெரியாரின் தமிழ் ஆராய்ச்சி" என்று தலைப்பிட்டு அதே தென்மொழியில் விரிவான கட்டுரை தீட்டினார். "தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி" என்று பெரியார் எழுதிய போது வெகுண்டெழுந்து 'தமிழ் ஒரு காட்டு மிராண்டி மொழியே' என்று 16 பக்கம் பெரியாரை கடிந்து எழுதவும் துணிந்தார்

**கருணாநிதியும் பெருஞ்சித்திரநாரும்:**

தமிழின இரண்டகர் கருணாநிதி தென்மொழி ஏட்டை தடை செய்த போது பெருஞ்சித்திரனார் தமிழ்சிட்டு ஏட்டை தொடங்கி கொள்கை முழக்கம் செய்தார்.



1976இல் ஆரியப்பித்து கொண்ட பெண் இந்திரா காந்தியால் மிசா சட்டத்தில் ஓராண்டு தளைப்படுத்தப்பட்டார். 1983ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போர் தீவிரமடைந்த போது அதற்குத் துணை நின்றார். 27.1.1993இல் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதால் ஆரிய செயலலிதா அரசு கொடிய தடா சட்டத்தில் கைது செய்தது. நான்குமாதம் சிறைவாசம் கழித்த பின்னரே வெளியே வந்தார்.

குமர தர்மசீலன் இதழாசிரியர்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கட்டுரை

**இறுதி போராட்டம்:**

1994இல் 'திராவிடர்' என்று சொல்வது தவறு என்றும், 'தமிழர்' என்றே குறிப்பிட வேண்டுமென்றும் தனது 'தமிழ் நிலம்' ஏட்டில் அறிக்கை விடுத்தார். தாழ்த்தப்பட்டோரை 'பழந்தமிழர்' என்றே குறிப்பிட வேண்டும். ஆதிதிராவிடர் என்றோ, ஹரிஜன் என்றோ, தலித் என்றோ அழைக்கக் கூடாது என்பதையும் தெளிவாகக் கூறி விளக்கமளித்தார்.

கடும் காய்ச்சல் கண்டு துன்ப நிலையில் இருந்த போதும் 24.4.95இல் நடந்த தமிழே பயிற்றுமொழி, ஆட்சிமொழி என்று கூறி தலைநகர் தமிழ்க்கழகம் நடத்திய பேரணியில் கலந்து கொண்டு குடும்பத்தோடு தளைப்படுத்தப்பட்டார். அதுவே பெருஞ்சித்திரனார் இறுதியாகப் பங்கேற்றப் போராட்டமாகும்.

**மறைவு:**

இவரது படைப்புகள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது

சளித்தொல்லை மிகுந்து, சிறுநீரகம் செயலிழப்புக்குள்ளான நிலையில் 11.6.1995 இல் இத்தமிழ்ப் பேருலகத்தை கண்ணீர் கடலில் மிதக்க விட்டு மறைந்தார்.



குமர தர்மசீலன் இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

**அகமும் தமிழே!** **முதலும் தமிழே!!**

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com